# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


**பேச்சுப் போட்டி 2023**

## ஆண்டு 9

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

மதிப்பிற்குரிய பெரியோர்கள் அனைவருக்கும் வணக்கம்.

# தமிழ் இலக்கியங்கள்

தமிழ் மொழியின் உயர்விற்கும் வளர்ச்சிக்கும் சிறப்பு சேர்த்துக் கொண்டு, உலக மொழிகளுள் முதுமொழியாய் வாழும் தமிழ் மொழியின் இலக்கியங்கள் பற்றி பேச வந்துள்ளேன்.

ஒரு மொழியின் வரலாற்றினையும் சிறப்பினையும் அறியவேண்டுமாயின், அம்மொழியில் உள்ள இலக்கியங்களைப் படிக்க வேண்டும். சங்கத் தமிழ் இலக்கியங்களும், பல்லவர் கால பக்தி இலக்கியங்களும், சோழர் கால காப்பிய இலக்கியங்களும், தமிழ்மொழியின் சிறப்பினை உலகிற்கு எடுத்து இயம்புகின்றன .

வள்ளுவன் தன்னை உலகிற்கு வழங்கியதும், ஔவைப் பாட்டியினை அறிமுகப் படுத்தியதும், கம்பனைத் தந்ததும், கவி பாடிய பாரதி பிறந்ததும், எங்கள் தமிழ் மொழி யின் இலக்கியச் சோலையிலே ஆகும்.

ஔவை அருளிய ஆத்திசூடியும் மூதுரையும் அரிய பல கூறும் நல் வழியும் கொன்றைவேந்தனும் என்றும் நிலைத்து நிற்கும் நூல்களாகும்.

வள்ளுவன் தந்த திருக்குறட் பாக்கள் அனைத்துக்கும் இணையாக, வேறு எந்த மொழியிலும் இலக்கியமில்லை.

“கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி
குறுகத் தறித்த குறள்”
என்னும் பெருமை கொண்டது திருக்குறள்



கம்பன் என்னும் கவிச்சக்கரவர்த்தி, தந்த கவிதைப் பெட்டகம் ‘கம்பராமாயணம்’. சொல்லால் மொழியால் சோர்விலாக் கம்பன் காவியத்தை அள்ளிப் பருகிட வேண்டும்

பாரதி எனும் மகாகவி பாடிய பாடல்கள், எளிய தமிழ் இலக்கியப் பாக்கள். பாலருக்கும் பாமரர்க்கும் வித்தகர்க்கும் தமிழில் இலக்கியங்கள் குவிந்து கிடக்கின்றனவே. இலக்கியம் படிப்போம் நல்ல தமிழ் இலக்கியங்கள் சமைப்போம்.

நன்றி வணக்கம்.

ஆக்கம் : ஆசிரியர் திருமதி. நிர்மலா திலகரட்ணா.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 03.06.2023 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.